DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.178/2023**

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | பார்த்திபன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | பொன்னுச்சாமி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 10.06.2026

எதிரி ஆஜர் இல்லை. அவரைப்பொறுத்து குவிமுச பிரிவு 317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சென்னை பெருநகர காவல் பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் தேவகோட்டை தாலுகா காவல் நிலையத்தில் 16.06.2023 ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது திருநாவுக்கரசர் என்பவர் புகார்தாராக கொடுத்த மனுவை பெற்று நிலைய குற்ற எண்.119/2023, u/s.294(b),506(1)ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் 16.06.2023 ம் தேதி 12.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார்

செய்தேன். (**மேற்படி மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்னர் அன்றை தினமே வழக்கின் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 16.06.2023 ம் தேதி மாலை 17.30 மணிக்கு வழக்கின் எதிரியை காவல் நிலையம் கொண்டு வர கைதுக்கான காரணம் கூறி எதிரியை கைது செய்து பிணையில் விடக்கூடிய குற்றமாக உள்ளதால் நிலைய பிணையில் 18.30 மணிக்கு விடுவித்தேன். 11.06.2023 ம் தேதி சாட்சியங்களின் வாக்குமூலத்திலும் அடிப்படையிலும் எனது புலன்விசாணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

புகார் மனுவில் சம்பவம் 15.06.2023 ம் தேதி இரவு 10.00 மணிக்கு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு முன்பாக 12.06.2023 ம் தேதி ஊர்க்கு ஒதுக்குப்புறமாக உள்ள தண்ணீர்த்தொட்டியில் எதிரி குளிக்கும்போது அ.சா.1 அங்கு சென்றபோது அவரை எதிரி திட்டியதாகவும் மிரட்டியதாகவும் அன்றைய தினமே என்னிடம் புகார் கொடுத்துள்ளார் என்றால் என்னிடம் கொடுக்கவில்லை. காவல் நிலையத்திற்கும் சம்பவ இடத்திற்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 12km இருக்கும். அ.சா.1 ற்கும் எதிரிக்கும் கோவில் திருவிழா சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது என்றால் அவ்வாறு என்னிடம் சொல்லவில்லை. சம்பவ இடத்தை சுற்றி நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அ.சா.1 ன் உறவினர்களை தவிர அக்கம் பக்கத்தில் உள்ள தனிநபர்கள் யாரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் அக்கம் பக்கத்தில்தான் புகார்தாரரின் சகோதரி வீடும் உறவினர்கள் வீடுகள் அமைந்துள்ளது, சம்பவ இடத்தில் உள்ள சாட்சிகளைதான் விசாரித்துள்ளேன்.

புகார்தாரரின் சகோதரி சென்னையில் வசிக்கிறார் என்றால் வீடு சென்னையில் உள்ளது ஆனால் சம்பவ சமயத்தில் உடல்நிலை சரியில்லை என்று ஊருக்கு வந்திருக்கிறார். அ.சா.1 மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தாக்கியதாகவோ மருத்துமனையில் இருந்ததாகவோ என்னிடம் கூறவில்லை. மாதிரி வரைபடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் செட்டியேந்தல்-அனுமந்தக்குடி சாலைக்கு அருகே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சம்பவ இடத்திற்கு மேற்கே மேற்படி சாலை அமைந்துள்ளது. மேற்படி சாலைக்கும் புகார்தாரரின் வீட்டிற்கும் எவ்வளவு துாரம் என்றால் சுமார் 50 மீட்டர் இருக்கும். அ.சா.1 ற்கும் எதிரிக்கும் இருந்த முன்விரோதம் காரணமாக மதுபோதையில் எதிரியை தாக்கிவிட்டு தன்மீது வழக்கு வந்துவிடக்கூடாது என்பதற்காக சகோதரியை வைத்து எழுதி அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து பார்வை மகஜர் மற்றும்மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.